செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-57 செப்டம்பர் , 2025

தனியார் வங்கி தொழிற்சங்கங்களின் முதலாவது தேசிய மாநாடு தனியார் வங்கி ஊழியர்கள் ஒன்றிணைந்து செயல்பட முடிவு

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்துடன் இணைந்த தனியார் துறை வங்கி தொழிற்சங்கங்களின் முதல் தேசிய மாநாடு ஆகஸ்ட் 24 மற்றும் 25, 2025 அன்று கேரள மாநிலத்தில் ஆலுவா நகரில் சிறப்புற நடைபெற்றது.



மாநாட்டினை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தொடங்கி வைத்தார். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் **B S** ராம்பாபு, இணைச் செயலாளர் தோழர் **B** ராம்பிரகாஷ், பொருளாளர் தோழர் **K** ஸ்ரீகிருஷ்ணா ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.



இம்மாநாட்டில், கர்நாடகா வங்கி ஊழியர் சங்கம், கரூர் வைஸ்யா வங்கி ஊழியர் சங்கம், கோடக் மஹிந்திரா வங்கி ஊழியர் சங்கம், ரத்னாகர் வங்கி ஊழியர் சங்கம், தனலட்சுமி வங்கி ஊழியர் சங்கம், கத்தோலிக் சிரியன் வங்கி ஊழியர் சங்கம், நைனிடால் வங்கி ஊழியர் சங்கம், **HDFC** வங்கி ஊழியர் சங்கம், தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஊழியர் சங்கம் மற்றும் பெடரல் வங்கி ஊழியர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தனியார் வங்கிகளில் செயல்படும் நம் இணைப்பு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தனது துவக்க உரையில், நமது சங்கத்தின் தொடர்ந்த பிரச்சாரங்கள் மற்றும் போராட்டங்கள் முக்கிய தனியார் வங்கிகள் தேசியமயமாக்குவதற்கு வழி வகுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலியது என்று சுட்டிக்காட்டினார்.

பொதுத்துறையை தனியார்மயமாக்குவதும், தனியார்துறையை அந்நியமயமாக்குவதும் தற்போதைய ஒன்றிய அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது என்றும், தற்போது நாட்டில் செயல்படும் அனைத்து தனியார் வங்கிகளையும் தேசியமயமாக்கி, பொதுத்துறையின் கீழ் கொண்டுவர வேண்டியது அவசியமாகியுள்ளது என்றும் தோழர் **C H** வெங்கடாசலம் கூறினார்.

CSB வங்கியில், இதுவரை **11**வது மற்றும் **12**வது இருதரப்பு ஒப்பந்தப் பலன்கள் ஊழியர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது, பெரும்பாலான தனியார் வங்கிகள் ஓய்வு பெற்றவர்களுக்கு **EX-GRATIA** ஓய்வூதியத்தை வழங்காதது, **IDBI** வங்கியினை தனியாருக்கு விற்பனை செய்வது போன்ற அனைத்து தாக்குதல்கள் மற்றும் சவால்களுக்கு எதிராக போராட்டங்களை ஊழியர்கள் தொடர வேண்டுமென்றும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அனைத்து போராட்டங்களிலும் துணைநிற்கும் என்றும் உறுதியளித்தார்.



நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்கள் - தர்ணா - வேலை நிறுத்தம் அனுசரிக்க முடிவு:

தனியார் வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்து மாநிலங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என்றும், **10-12-2025** அன்று புது டில்லியில் பாராளுமன்றம் முன்பு தேசிய அளவிலான தர்ணா போராட்டம் அனுசரிப்பது என்றும் ஜனவரி, **2026**ல் நாடு தழுவிய வேலை நிறுத்த அறைகூவல் அறிவிக்கவும் மாநாடு தீர்மானித்தது.

தனியார் வங்கி ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு முறியடிக்க மேலும் ஒற்றுமையுடனும் வலிமையுடனும் எதிர்த்துப் போராடுவதற்கான உறுதியுடன் தனியார் வங்கி ஊழியர்களிடையே ஒற்றுமையினைப் பேணி, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பதாகையின் கீழ் தனியார்துறை வங்கிகளில் செயல்படும் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களிடையே ஒருங்கிணைப்பினை மேலும் வலிமையாக்கிடவும் மாநாடு முடிவு செய்தது.

நிலுவையிலுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அரசின் அலட்சியம் வேலைநிறுத்தப் போராட்டத்தினை தொடர்ந்திட UFBU ஆலோசனை

நிலுவையிலுள்ள கோரிக்கைகள் தொடர்பாக IBA-UFBU–CLC இடையே பேச்சுவார்த்தை:

நிலுவையிலுள்ள நம்முடைய கோரிக்கைகள் தொடர்பாக **IBA** மற்றும் **UFBU** இடையே **10-8-2025** அன்று புது தில்லியில் உள்ள மத்திய தொழிலாளர் ஆணையர் (**CLC**) அலுவலகத்தில் சமரசக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு முன்னதாக, **IBA** மற்றும் **CLC** அதிகாரிகளுடன் விவாதிக்கும்போது, தீர்க்கப்படாத நம் கோரிக்கைகள் குறித்து சங்கங்களிடையே ஒருமித்த நிலைப்பாடு எட்டப்படும் நோக்கில் **UFBU** பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது.



UFBU கூட்டத்தில் வாரத்தில் **5** நாள் வங்கிச் சேவை அமல்படுத்துவதில் ஒன்றிய அரசாங்கத்தின் தேவையற்ற தாமதம் குறித்து அனைத்து சங்கங்களும் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தின. மேலும் இக்கோரிக்கையினை வலியுறுத்தி வேலைநிறுத்த நடவடிக்கையை விரைவில் மீண்டும் தொடங்க வேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

வங்கிகளில் தேவையான அளவு எழுத்தர் நியமனம் செய்யும் **IBPS** தேர்வு முறை தொடங்கப்பட்டாலும், வங்கிகளில் துணைநிலை ஊழியர் நியமனம் செய்வதன் அவசியத்தினை வலியுறுத்தவும் முடிவு செய்யப்பட்டது. மேலும், **PLI** வழங்குவதில் வங்கிகளின் நிலைப்பாடு இருதரப்பு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு உட்பட்டு இருந்திடவேண்டும் என்றும், சங்கங்களுடன் விவாதித்து இதனை மேம்படுத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர், **IBA** உடனான பேச்சுவார்த்தையின்போது, **2024-25** ஆம் ஆண்டு மற்றும் நடப்பு ஆண்டில் **2025-26** செயல்முறையின் கீழ் எழுத்தர் ஆட்சேர்ப்பு பற்றிய விவரங்கள் குறித்து **IBA** அறிக்கை அளித்தது. துணைப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது குறித்து இருதரப்பு பேச்சுவார்த்தையில் விவாதிக்க **IBA** ஒப்புக்கொண்டது. மேலும், வாரத்தில் **5** நாள் வங்கிச் சேவை குறித்து **IBA** அரசாங்கத்தின் ஒப்புதலுக்காகக் காத்திருப்பதாகத் தெரிவித்தது.



பின்னர் **CLC** உடனான சமரசக் கூட்டத்தில் **IBA**, அனைத்து பொதுத்துறை மற்றும் பல தனியார் வங்கிகளின் நிர்வாகிகள் மற்றும் நிதி அமைச்சகத்தின் **DFS** பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சமரச பேச்சுவார்த்தையின் போது பண்பற்ற வாடிக்கையாளர்கள் மற்றும் சமூக விரோதிகளால் வங்கி ஊழியர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவது, மற்றும் இத்தகைய தாக்குதல்கள் நிகழாமல் தடுக்க வங்கிக் கிளைகளுக்கு நிரந்தர ஆயுதமேந்திய காவலர்கள் வழங்கப்பட வேண்டும் என்பதும் **UFBU** வினால் வலியுறுத்தப்பட்டது.

தொழிற்சங்கங்களின் பரிந்துரையை ஆராய்ந்து, இருதரப்பு ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்டுள்ளபடி, வங்கிக் கிளைகளில் ஆயுதமேந்திய பாதுகாப்பு காவலர்களை நியமிப்பது குறித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு **IBA** மற்றும் வங்கிகளுக்கு **CLC** அறிவுறுத்தினார்.

வங்கிக் கிளைகளில் கடுமையான ஊழியர் பற்றாக்குறை உள்ளதால் ஒவ்வொரு வங்கியும் தங்கள் மனிதவளத் தேவையை ஆய்வு செய்து, தேவையான ஊழியர் நியமனத்தினை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்ற சங்கங்களின் கோரிக்கையினை **IBA** ஒப்புக்கொண்டது

நிலுவையில் உள்ள இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் தேவையற்ற தாமதம் செய்வது குறித்து நம் அதிருப்தியை தெரிவித்ததுடன், மேலும் தாமதம் செய்யும் போக்கு தொடர்ந்தால், வேலைநிறுத்த போராட்டங்களை மீண்டும் அறிவிக்க **UFBU** தயங்காது என்றும் கூறியதைத் தொடர்ந்து, இக்கோரிக்கைகளின்மீது நடவடிக்கைகளை துரிதப்படுத்த தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்வதாக **CLC** தெரிவித்தது. தொழிற்சங்கங்களுடன் அடுத்தகட்ட சமரசப் பேச்சுவார்த்தை **15-10-2025** தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது ஆண்டு ஸ்தாபன தின சிறப்புக் கூட்டம் - ஈரோடு - 13-08-2025

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது ஆண்டு ஸ்தாபன தின சிறப்புக் கூட்டம் ஈரோடு மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் ஈரோடு நகரில் **13-08-2025** அன்று நடைபெற்றது. இச் சிறப்புக் கூட்டத்தில் ஈரோடு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பணியாற்றும் நமது சங்க உறுப்பினர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர்.



தோழர் **E** அருணாசலம் அவர்கள் தன்னுடைய சிறப்புரையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இடைவிடாத போராட்டங்களின் விளைவாக இந்திய நாட்டில் இயங்கிவந்த தனியார் துறை வங்கிகள் **1969**ம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன என்றும், அதன் விளைவாக ஏராளமான வங்கிக் கிளைகள் துவக்கப்பட்டதுடன், வங்கிச் சேவை அனைத்துப்பிரிவு மக்களுக்கும் கிடைக்கப்பெற்றது என்று விளக்கினார்.

பெருமுதலாளிகளின் வசமிருந்த வங்கிகளை அரசுடைமை ஆக்கியது மற்றும் அந்த வங்கிகளின் நிர்வாகக் குழுக்களில் ஊழியர்களின் பிரதிநிதிகள் இடம்பெற வைத்தது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாற்றுச் சாதனை என்று கூறினார்.

வங்கிகள் தேசியமயத்தின் விளைவாகவே சுமார் ரூ 240 இலட்சம் கோடிக்கும் மேலான பொதுமக்களின் சேமிப்பு பாதுகாப்பாக உள்ளது என்றும், ஒன்றிய அரசின் தனியார்மய நடவடிக்கைகளை ஒன்றிணைந்து தடுத்து பொதுத்துறை வங்கிகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தினை தோழர் E அருணாசலம் அவர்கள் வலியுறுத்தினார்.



ஈரோடு மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் A அல்டாப் ஹுசைன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச்சிறப்புக் கூட்டத்தில் மாவட்ட சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் R நரசிம்மன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று உரையாற்றினர்.

IDBI வங்கியில் அகில இந்திய வேலைநிறுத்தம் வெற்றிகரமாக அனுசரிப்பு

IDBI வங்கியை தனியார்மயமாக்குவதற்கு எதிராக ஆகஸ்ட் 11, 2025 அன்று AIBEA மற்றும் AIBOA கூட்டாக அறிவித்திருந்த IDBI வங்கி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் வேலைநிறுத்தம் மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக நடைபெற்றது.



IDBI வங்கி தனியார்மயமாக்கப்படும் என்று நிதி அமைச்சர் அறிவித்ததிலிருந்து அதனை எதிர்த்து பல்வேறு போராட்டங்களை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவித்து தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அரசாங்கம் மற்றும் LIC , IDBI வங்கியில் கொண்டுள்ள தற்போதைய 95% பங்குகளில் சுமார் 61 % பங்கினை தனியார் முதலீட்டாளருக்கு விற்றிட ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இந்நடவடிக்கையினை அனுமத்தித்தால், IDBI வங்கியின் மூலதனத்தின் 66% தனியார்மயமாக்கப்படும் அபாயம் உள்ளது.

IDBI வங்கியை கனடா மற்றும் துபாய் போன்ற வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கையகப் படுத்துவதற்கு முயற்சி செய்வதாக செய்திகள் கூறுகின்றன. வங்கிகளைப் பெறுவதற்கான வாய்ப்பை வெளிநாட்டு கார்பொரேட் நிதி நிறுவனங்கள் கைப்பற்றுவதன் விளைவாக இந்திய மக்களின் கோடிக்கணக்கான சேமிப்பு அந்நிய நாட்டு தனியார் முதலீட்டாளரிடம் ஒப்படைக்கப்படும் அபாயகரமான நிலைமை உருவாகியுள்ளது.

IDBI Bank	Present equity holding	Proposed disinvestment/ Sale	Capital after disinvestment/ sale
Government	45.48 %	30.24 %	15.24 %
LIC	49.24 %	30.48 %	18.76 %
Private	5.28 %	-	66.00 %

இத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்து **AIBEA** மற்றும் **AIBOA** அறிவித்திருந்த **IDBI** வங்கி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் அகில இந்திய வேலைநிறுத்தம் ஆகஸ்ட் 11, 2025 அன்று வெற்றிகரமாக நடைபெற்றது. வேலைநிறுத்த நாளன்று சென்னை, கோவை, திருச்சி மற்றும் பல்வேறு இடங்களில் ஒருமித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



பொதுத்துறை வங்கிகளில் புதிய எழுத்தர் நியமனம் - **IBPS** அறிவிப்பு எண்ணிக்கையினை அதிகப்படுத்திட **AIBEA** கோரிக்கை

பொதுத்துறை வங்கிகளில் போதுமான எழுத்தர் மற்றும் துணைநிலை ஊழியர்களை நியமிக்க வேண்டியதன் அவசரத் தேவையை வலியுறுத்தி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் ஒரு வருடத்திற்கும் மேலாக போராட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றது.

IBPS INDENT BY BANKS	TN	PONDY
Canara Bank	450	5
Central Bank of India	127	0
Bank of Baroda	105	5
Punjab National Bank	60	2
Bank of Maharashtra	40	1
Union Bank of India	12	0
Bank of India	20	0
Punjab & Sind Bank	30	1
Indian Overseas Bank	50	5
TOTAL	894	19

வங்கிக் கிளைகளில் உள்ள காலியிடங்களில் போதுமான ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் தொடர்ச்சியாக, நமது சங்கம் தலைமை தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் வங்கி நிர்வாகங்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

CLC முன் நடைபெற்ற சமரசக் கூட்டங்களின் போது, வங்கிகளில் எழுத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக **IBA** மற்றும் பல்வேறு வங்கிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதன் தொடர்ச்சியாக, அடுத்த நிதியாண்டு 2026-27க்கான எழுத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு IBPSன் விளம்பரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுமைக்குமாக 10,277 எழுத்தர்களை நியமிப்பதற்கு வங்கிகள் அறிவித்துள்ளன. தமிழ்நாட்டில் (புதுச்சேரி உட்பட) செயல்படும் பொதுத்துறை வங்கிகளுக்கு 913 எழுத்தர்கள் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வங்கிக் கிளைகளில் இலட்சத்திற்கும் மேலான ஊழியர்கள் நியமனம் செய்யப்படவேண்டிய நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள எழுத்தர் எண்ணிக்கை மிகவும் குறைவானதாக உள்ளதால், இதனை அதிகரித்திட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தோழர் தாரக் மற்றும் தோழர் N சம்பத் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு சிறப்புக் கூட்டம் - சேலம் - 16-08-2025

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஒப்பற்ற தலைவர் தோழர் தாரகேஷ்வர் சக்கரவர்த்தி மற்றும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் ஸ்தாபகத் தலைவர்களுள் ஒருவரான தோழர் N சம்பத் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டினை அனுசரிக்கும் வகையில் 16-08-2025 அன்று சேலத்தில் சிறப்புக் கூட்டம் ஒன்றிற்கு சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.



இச்சிறப்புக் கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம், தலைவர் தோழர் A சிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தோழர் C H வெங்கடாசலம் அவர்கள் தன்னுடைய உரையில் சம்மேளனத்தின் தற்போதைய தலைவர்கள் பலரும் தோழர் N சம்பத் அவர்களால் அடையாளம் காணப்பட்டு அவரிடம் தொழிற்சங்கக் கல்வி பயின்றவர்கள் என்று புகழ்ந்துரைத்தார். தோழர் N சம்பத் அவர்களின் முயற்சியினால் சம்மேளனத்தின் மகளிர் அமைப்பு (WOMEN'S COUNCIL) மற்றும் இளைஞர் அமைப்பு(YOUTH LEAGUE) ஆகிய அமைப்புகள் உருவாக்கப்பட்டு அவை மற்ற மாநில சம்மேளனங்களுக்கு முன்மாதிரியாக செயல்பட்டது என்று கூறினார்.

தமிழகத்திலிருந்த கூட்டுறவுத் துறை ஊழியர்கள் அனைவரையும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கீழ் ஒன்றிணைத்து வலிமையான சங்கத்தினை கட்டமைத்தது தோழர் சம்பத் அவர்களுடைய சாதனையாகும் என்றும் கூறினார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஒப்பற்ற தலைவர் தோழர் தாரகேஸ்வர் சக்கரவர்த்தி அவர்கள் வங்கி ஊழியர்களுக்காக மட்டுமின்றி, சமுதாயத்தின் பிற அமைப்புகளில் பணியாற்றிய ஊழியர்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்துப் போராடுவதில் வாழ்நாள் முழுமையும் அர்ப்பணித்துக் கொண்டார் என்று தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் புகழ்ந்துரைத்தார்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தனது சிறப்புரையில், வங்கிகளில் தேவையான ஊழியர் நியமனம் மற்றும் தீர்க்கப்படாமல்



நிலுவையில் உள்ள கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கவுள்ள நாடு தழுவிய போராட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்.

மேலும், கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஓய்வூதியக் கோரிக்கையினை வென்றெடுக்க அனைத்துப் போராட்ட நடவடிக்கைகளிலும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் உறுதுணையாக இருந்து போராடும் என்று கூறினார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இடைவிடாத பிரச்சாரங்கள், மற்றும் உறுப்பினர்களின் வீரம்செறிந்த போராட்டங்களின் காரணமாகவே இந்திய வங்கித்துறை இன்றளவும் தொடர்ந்து பொதுத்துறையில் இருந்து நாட்டிற்கு சேவை செய்கின்றது என்று எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளும், சேலம் மற்றும் அருகாமையிலுள்ள கிளைகளில் பணியாற்றும் சங்க உறுப்பினர்களும் பெருவாரியாகக் கலந்து கொண்டனர்.


தஞ்சை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் பத்தாவது மாவட்ட மாநாடு
தஞ்சாவூர் - 31-08-2025

தஞ்சை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் பத்தாவது மாநாடு கடந்த **31-08-2025** அன்று தஞ்சை நகரில் சிறப்புற நடைபெற்றது. மாவட்டம் முழுவதிலிமிருந்தும் **350**க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்று மாநாட்டினை வெற்றிகரமாக்கினர். மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் கொடியேற்றித் துவக்கி வைத்தார். மாநாட்டின் சிறப்பு விருந்தினராக தஞ்சை பாராளுமன்ற உறுப்பினர் திரு **S** முரசொலி **M P** அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் **G** வைரப்பன், அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் (**AITUC**) செயலாளர்கள் தோழர் **S** சந்திரகுமார் மற்றும் தோழர் **R** தில்லைவனம் மற்றும் பல்வேறு மாவட்ட வங்கி ஊழியர் சங்கப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தனது துவக்கவுரையில், வங்கிகளில் தேவையான ஊழியர் நியமனம் மற்றும் வாரத்தில் ஐந்து நாட்கள் வேலைத் திட்டம் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவித்துள்ள நாடு தழுவிய போராட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். சம்மேளனம் அறிவிக்கும் அனைத்துப் போராட்ட நடவடிக்கைகளிலும் பங்கேற்று வெற்றிபெறச் செய்வதில் தஞ்சை மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் முழுமையாக உறுதுணையாக உள்ளதாக புகழ்ந்துரைத்தார்.



தஞ்சை மக்களவை உறுப்பினர் திரு **S** முரசொலி **M P** அவர்கள் தன்னுடைய சிறப்புரையில் ஒன்றிய அரசாங்கத்தின் பொதுத்துறை விரோத நடவடிக்கைகளை கண்டித்ததோடு, பொதுத்துறை வங்கிகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினார். பொதுத்துறையினை பலவீனப்படுத்தி தனியார்மயமாக்கும் ஒன்றிய அரசின் சட்டங்களுக்கு எதிரான வங்கி ஊழியர்களுடைய போராட்ட நடவடிக்கைகளை ஆதரித்து நாடாளுமன்றத்தில் குரலெழுப்புவதாக உறுதியளித்தார்.



அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் **G** வைரப்பன் அவர்கள் தன்னுடைய வாழ்த்துரையில், தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மாநில சங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளில் தஞ்சை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் பங்களிப்பினை பாராட்டினார்.

மாநாட்டின் முடிவில் தோழர் அன்பழகன் அவர்கள் தலைவராகவும், தோழர் கமலவாசன் (இந்தியன் வங்கி) அவர்கள் பொதுச் செயலாளராகவும் தோழர் நெப்போலியன் (கூட்டுறவு வங்கி) அவர்கள் பொருளாளராகவும் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தஞ்சை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகின்றது.

உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரகடனம் - 01-09-2025
அமைதிக்கான தொழிற்சங்கங்களின் சர்வதேச நடவடிக்கை தினம்

ஐரோப்பாவில் உள்ள போலந்து நாட்டின் மீது ஜெர்மானிய நாஜிப்படையின் தாக்குதலின் காரணமாக இரண்டாம் உலகப் போர் தொடங்கிய நாள் செப்டம்பர் ஒன்றாம் நாள் ஆகும். அமைதியை நிலைநாட்டுவதற்கான உறுதி ஏற்கும் **தொழிற்சங்கங்களின் சர்வதேச நடவடிக்கை தினமாக இந்நாளை 2025ம் ஆண்டு முழுவதும் அனுசரிக்க வலியுறுத்தி** உலகத் தொழிற்சங்க சம்மேளனம் (**WFTU**) அதன் உறுப்பு சங்கங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.



இரண்டாம் உலகப் போரின் பாசிச கொடும் தாக்குதல்களாலும், ஏகாதிபத்திய மோதல்களினாலும் உயிர் துறந்த மற்றும் மோசமாக பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களை நினைவிலேந்தி, அவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் செப்டம்பர் ஒன்றாம் நாள், அமைதிக்கான சர்வதேச நாளாக பிரகடனப்படுத்தப்பட்டு **WFTU**ன் வர்க்கம் சார்ந்த சர்வதேச தொழிற்சங்க இயக்கங்களால் வருடந்தோறும் அனுசரிக்கப்படுகின்றது.

பாலஸ்தீனம் மற்றும் உக்ரைன் போன்ற நாடுகளில் இராணுவ மோதல்கள் தீவிரமடைந்து, அவை மீதான போர் நடவடிக்கைகள் ஏகாதிபத்தியங்களின் அன்றாட செயல்பாடாக அதிகரித்து வருவதால் பாசிசம், இனவெறி மற்றும் அந்நிய வெறுப்பு ஆகியவை தலைவிரித்தாடும் இத்தருணத்தில் அமைதிக்கான போராட்டம் மிகவும் அவசியம் என்று **WFTU** உணர்கிறது.

ஆண்டுதோறும் இந்நாடுகள் தங்கள் இராணுவ செலவுத் திட்டத்தின் தொகையினை அதிகரிக்கும் போக்கு **NATO** உறுப்பு நாடுகளிடையே ஒரு 'போர் பொருளாதாரம்' நோக்கிய போக்கினை உலகிற்கு உணர்த்துகின்றது.

இத்தகைய அழிவிற்கான செயல் திட்டங்கள் நாடுகளிடையே பதற்றத்தினை உருவாக்குவதோடு, மோசமான விளைவுகளுடன் பரவலான ஏகாதிபத்திய மோதலின் அபாயத்தை அதிகரிக்கிறது. **NATO** அமைப்பு நாடுகளின் போர் தயாரிப்பு நடவடிக்கைகளை **WFTU** கண்டிக்கிறது.

புவியின் வளங்கள் மக்கள் நலன்களுக்கே அன்றி - போரிட்டு அழிப்பதற்கு அல்ல:

உலகெங்கிலும் உள்ள வளங்களை, ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்காகவும், ஏகபோக இலாபத்திற்காகவும் போர்களிலும், இரத்தக்களரியிலும் "முதலீடு" செய்யக்கூடாது என்றும், அவை அனைத்தையும் தங்கள் தேவைகளுக்காகவும், மேம்பட்ட வாழ்க்கைக்காகவும், போதுமான சுகாதாரப் பராமரிப்பு மற்றும் தரமான கல்விக்காகவும், கண்ணியமான சம்பளம் மற்றும் ஓய்வூதியம், மற்றைய சலுகைகளுக்காகவும் பயன்படுத்திட வேண்டும் என்று உலகத் தொழிலாளர்கள் கோருகிறார்கள்.



உலகெங்கிலும் பரவிவரும் அனைத்து ஏகாதிபத்தியப் போர்கள் மற்றும் பகைமை பாராட்டும் நாடுகளின் அத்துமீறிய தலையீடுகளுக்கு உடனடியான மற்றும் நிபந்தனையற்ற முடிவை **WFTU** கோருகின்றது.

NATO மற்றும் அனைத்து இராணுவக் கூட்டணிகளையும் கலைக்கவும், அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிக்கவும், உக்ரைன், ஏமன், சூடான் மற்றும் அனைத்து போர் மண்டலங்களிலும் பிற இடங்களிலும் போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவும் **WFTU** கோருகிறது.

பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இனப்படுகொலை, அரபு பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு மற்றும் குடியேற்றங்களை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தியும், சுதந்திரமான பாலஸ்தீன அரசை நிறுவுவதற்கும், லெபனான், சிரியா மற்றும் ஈரானுக்கு எதிரான இஸ்ரேலிய ஆயுதத் தாக்குதல்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை தடை செய்யவும் **WFTU** தொழிலாளர் எதிர்ப்பினை அமைதிக்கான இந்நாளில் தீவிரப்படுத்துகின்றது.

மக்கள் தங்களுக்குத் தேவையான இறையாண்மை, சுதந்திரம் மற்றும் உரிமையை தேர்ந்தெடுத்து வாழ்ந்திடும் வகையிலான கொள்கைகளை அனைத்து நாடுகளும் கடைபிடிக்க வேண்டும் என **WFTU** உரக்கக் கோருகின்றது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அவர்களின் நட்பு நாடுகளால் பல்வேறு நாடுகளுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட பாகுபாடுகள் மற்றும் தடைகளை கைவிட வேண்டி **WFTU** கண்டிக்கின்றது.

போர் பொருளாதாரத்தின் தாக்கங்கள், ஏற்கனவே அதிகரித்து வரும் விலைவாசி உயர்வு, கட்டிலடங்கா பணவீக்கம் ஆகிய தீமையான விளைவுகளை உருவாக்கி சாதாரண மக்கள் மீது பெரும் சுமையினை ஏற்படுத்துவதால், மக்களின் அன்றாட வாழ்க்கையில் நேரடியாக தீங்கு விளைவிக்கும் போர் பொருளாதார அழிவுப் பாதையை பின்பற்றும் அனைத்து முதலாளித்துவ அரசாங்கங்களையும் தொழிலாளர்கள் தங்கள் முழு பலத்துடன் எதிர்க்கின்றனர்.

பன்னாட்டு நிறுவனங்களின் லாபத்தை அதிகரிப்பதற்காக நடத்தப்படும் போர்களுக்கு சாதாரண மக்கள் பலியாக்கப்படுகின்றனர். இதன் விளைவாக மரணம், வறுமை மற்றும் துயரம் ஏற்படுவதால், போர் பொருளாதாரத்தை சர்வதேச தொழிற்சங்கங்கள் மற்றும் **WFTU** இடைவிடாமல் எதிர்கின்றது.

மனிதகுல அழிவிற்கு வழிகோலும் ஏகாதிபத்திய போர் நடவடிக்கைகளுக்கு துணை புரியும் வேலை வாய்ப்புகளை புறக்கணிப்போம் :

வர்க்க சார்புடைய தொழிற்சங்கங்களின் போர்க்குணங்களைப் பின்பற்றி, தங்கள் நாட்டின் எந்தவொரு ஏகாதிபத்திய போர் நடவடிக்கையையும் தொழிலாளர்கள் எதிர்க்க வேண்டும்.



ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை உற்பத்தி செய்தல், மற்றும் அவற்றை சந்தைப்படுத்தி விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் தொழிலாளர்கள் வேலை செய்திட மறுக்க வேண்டும் என்றும் **WFTU** கேட்டுக்கொள்கின்றது.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புகளுடன் தொடர்புடைய எந்தவொரு செயலுக்கும் ஒத்துழைப்பு மறுத்து அவை தொடர்பான பணிகளை அந்தந்த நாடுகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் புறக்கணிக்க வேண்டும்.

மக்கள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் சமகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய புவியின் வளங்களைச் செலவிட வேண்டும். மாறாக அவற்றை போர்களுக்கும் இரத்தக்களரிகளுக்கும் பயன்படுத்துவதை எதிர்த்து தொழிலாளர் வர்க்கம் வலிமையான போராட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ள **WFTU** அறைகூவல் விடுக்கின்றது.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மற்றும் முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்தினை முறியடித்து, நீடித்த அமைதியை உறுதி செய்திடும் நோக்கில் சர்வதேசியம் மற்றும் வர்க்கப் போராட்டத்தின் குரலை வலுப்படுத்தும் வகையில், "போர்களுக்கு உதவிடும் பணிகளை புறக்கணிப்போம்" என்ற முழக்கத்தின்கீழ் உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்கள் மற்றும் போர்க்குணமிக்க தொழிற்சங்கங்கள் சர்வதேச அமைதிக்கான நடவடிக்கை தினத்தில் உறுதியேற்க உலகத் தொழிற்சங்க சம்மேளனம் (**WFTU**) அழைப்பு விடுக்கின்றது.